**மக்கள் வங்கி மற்றும் அதன் துணைக்கம்பனிகள் - 2020**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

மக்கள் வங்கியினதும் (''வங்கி'') வங்கி மற்றும் அதன் துணைக் கம்பனிகளினதும் (''தொகுதி'') 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான வருமானக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்பு உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான முறையே நிதிக்கூற்றுக்கள் மற்றும் ஒன்றிணைந்த நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

வங்கியானது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 5(1) ஆம் பிரிவில் அவருக்கு ஒப்படைக்கப்பட்ட அதிகாரத்தை பயன்படுத்தி 1992 மே 14 ஆம் திகதிய 715 ஆம் இலக்க அரசாங்க வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்ட முன்னாள் நிதி அமைச்சரின் கட்டளையொன்றின் மூலம் குறித்த நிதி அதிகாரச்சட்டத்தின் பகுதி II இலுள்ள ஏற்பாடுகளிலிருந்து விலக்களிக்கப்பட்டிருந்தது.

வங்கி மற்றும் தொகுதியின் 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க வங்கி மற்றும் தொகுதியின் இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, வங்கி மற்றும் தொகுதி தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல்,

தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது தொகுதியை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

வங்கியினதும் தொகுதியினதும் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் தொகுதியின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தொகுதி அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பான புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வு நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி தொகுதியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய தொடர்ந்து செயற்படுவதற்கு தொகுதிக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் தொகுதியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- வங்கியின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- வங்கியின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் வங்கி இணங்கியிருந்ததா என்பதும்,

- வங்கி அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வங்கியின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 தொங்கல் கணக்குகள்

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | **தொங்கல் கணக்கு – நிலுவையாகவுள்ள விநியோகம் தொடர்பாக வழங்குநர்களுக்கு செலுத்தப்பட்ட தொகை**<br>ரூபா 1,643 மில்லியன் தொகையான திரண்ட மீதி தீர்வு செய்யப்படாமல் இரண்டு ஆண்டுகளிற்கு மேலாக நிலுவையாக உள்ளது. | குறித்துக் கொள்ளப்பட்டது. இந்த விடயம் 2022 செப்தெம்பர் 30 இற்கு முன்னர் தீர்ப்பதற்கான இலக்குடன் எதிர்பார்க்கப்படுகிறது. | அத்தகைய மீதிகள் தொடர்பாக முறையான மதிப்பீடு மேற்கொள்ளப்பட்டு அவை விரைவில் தீர்வு செய்யப்பட வேண்டும். |
| (ஆ) | **தொங்கல் கணக்கு – O/A Contra Perform இல் உள்ள பணம்**<br>ரூபா 56.3 மில்லியன் மொத்த மீதியில் ரூபா 22.6 மில்லியன் அல்லது 40 சதவீத மீதி 3 ஆண்டு காலப்பகுதிக்கும் மேலாக நிலுவையாக காணப்பட்டது. | குறித்துக் கொள்ளப்பட்டது. ஒப்பந்ததாரர்களுக்கு தெரிவிப்பதற்கு தேவையான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன. 2022 திசெம்பர் 31 இற்கு முன்னர் தீர்வு செய்வதற்கான இலக்கொன்று காணப்படுகின்றது. | விரைவாக தீர்வு செய்யப்பட வேண்டும். |

## 1.6 தொடர்புடைய தரப்பினர் மற்றும் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்கள் வெளிப்படுத்தப்படாமை

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் நெருங்கிய குடும்ப உறுப்பினர்கள் மற்றும் அவர்களின் தொடர்புடைய நிறுவனங்களின் விபரங்களை நாளதுவரையாக்குவதற்கான செயன்முறையை வங்கி வலுப்படுத்தி கண்காணிக்க வேண்டும். | RPT கொடுக்கல் வாங்கல்களை கவர்வதற்கான செயன்முறை தற்போது மேலும் வலுப்படுத்தப்பட்டுள்ளதுடன் RPT வெளிப்படுத்தல்கள் தொடர்பான அனைத்து சமர்ப்பிப்புக்களும் DGM (இணக்கப்பாடு) மற்றும் சபை செயலாளர் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்றன. 2020 ஆண்டு அறிக்கையின் காலாண்டு BIRMC சமர்ப்பிப்பு மற்றும் கூட்டிணைந்த ஆளுகைப் பிரிவின் மூலம் வங்கிச் சட்டத்தின் 3(7)(i) ஆம் பணிப்புரையின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்கள் தொடர்பான | தேசிய கணக்காய்வு சட்டம் இயற்றப்படுவதன் மூலம் விசேடமாக பல்வேறு கட்டமைப்புகள்/ விதிகளின் கீழ் தேவைப்பாடுகளை உள்ளடக்கிய தொடர்புடைய தரப்பினர் கொடுக்கல் வாங்கல்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | தற்போது, முக்கிய வங்கி முறைமையின் மூலம் மேற்கொள்ளப்படும் அனைத்து தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களையும் இனங்காண்பதற்கான செயன்முறையை வங்கி மேற்கொண்டிருக்கவில்லை. (தொடர்புடைய தரப்பினர் | | |

| | |
|---|---|
| கொடுக்கல் வாங்கல்களை கண்காணித்து பிரித்தெடுத்தல்) | வெளிப்படுத்தல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. |

**1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 2007 இன் 11 ஆம் இலக்க வங்கிச் சட்ட பணிப்புரை மற்றும் அதன் பின்னர் மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட இலங்கையில் உரிமம் பெற்ற வணிக வங்கிகளுக்கான கூட்டிணைந்த ஆளுகைக்கான திருத்தங்கள் | | | |
| (i) 3(1)(i)(i)(iii) ஆம் பிரிவு | CEO மற்றும் KMPs இன் சுய மதிப்பீடு, சிறந்த நடைமுறைக் குறியீட்டின் (code of best practice) 2.21 ஆம் பிரிவின் பிரகாரம் சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்ததுடன் அவற்றின் மீளாய்வுக்காகவும், பலவீனங்கள் உள்ள பகுதிகளைப் பற்றி கலந்துரையாடுவதற்கும், தேவையான இடங்களில் மாற்றங்களைப் பரிந்துரைப்பதற்கும் பொழிப்பொன்று சபைக்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். 2020 இற்கான அத்தகைய மதிப்பீடுகள் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2021-01-01 முதல் 2021-12-31 வரையான காலப்பகுதிக்கான CEO/GM மற்றும் 12 ஆம் பக்கம் 3(6)(iii)(ஆ) பிரிவு 3(6)(iii)(இ) பிரிவு 3(6)(iv)(ஈ) பிரிவு KMPs இன் சுய மதிப்பீடுகள் மார்ச் மாத சபை கூட்டத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சிறந்த ஆளுகைக்காக ஒவ்வொரு ஆண்டும் சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ii) | 3(6)(iii)(ஆ) பிரிவு | பணிப்பாளர்கள், CEO மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரிற்கான நோக்கங்கள் மற்றும் இலக்குகள் மனித வளங்கள் மற்றும் சம்பளக் குழுவினால் கருத்தில் கொள்ளப்படுவதற்கு ஆவணப்படுத்தப்பட வேண்டிய போதிலும் பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினரிற்கானவை கருத்தில் கொள்ளப்பட்டிருக்கவில்லை. | 162/2021 மற்றும் 163/2021 ஆம் இலக்க BHRRC VIDE BHRRC இற்கு CEO/GM இன் செயலாற்றல் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் சிறந்த ஆளுகைக்காக மனித வளங்கள் மற்றும் சம்பளக் குழுவால் கருத்தில் கொள்ளப்பட வேண்டும். |
| (iii) | 3(6)(iii)(இ) பிரிவு | வங்கியின் கூட்டுத்தாபன மற்றும் நிறைவேற்று முகாமைத்துவத்திற்கான புதிய செயலாற்றல் மதிப்பீட்டு மாதிரி உருவாக்கப்பட்டிருந்த போதிலும் (BHRRC இல. 104/2019), சிறந்த ஆளுகைக்கான நோக்கங்கள் மற்றும் முன்னோக்கிச் செல்லும் இலக்குகளுக்கு எதிராக CEO மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியிளரின் செயலாற்றல் மதிப்பீடுகளைக் கருத்தில் கொள்வதற்கான நடவடிக்கைகளை குழு தொடங்க வேண்டும். | பிரதம நிறைவேற்று உத்தியோகத்தர்/ பொது முகாமையாளர் உட்பட முன்னரே தீர்மானிக்கப்பட்ட இலக்குகளுக்கு எதிராக இரு வழி செயலாற்றல் மதிப்பீடுகள் தற்போது மேற்கொள்ளப்படுகின்றன; 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த காலப்பகுதிக்கு - இவை வரவிருக்கும் சபை மனித வள சம்பளக் குழுவிற்கு சமர்ப்பிக்கப்படும். | சிறந்த ஆளுகைக்காக நோக்கங்கள் மற்றும் முன்னோக்கி செல்லும் இலக்குகளுக்கு எதிராக கருத்தில் கொள்ள வேண்டும். |
| (iv) | 3(6)(iv)(ஈ) பிரிவு | பணிப்பாளர்கள் மற்றும் CEO இன் வெளிப்படுத்தல்கள் நியமனக் குழு மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | CBSL இற்கு சமர்ப்பிப்பதற்கு முன்னர் மார்ச் மாத சபைக் கூட்டத்தில் பணிப்பார்கள் மற்றும் CEO களின் செளிப்படுத்தல் சமர்ப்பிக்கப்பட வேண்டும். | சிறந்த ஆளுகைக்காக முன்னோக்கி செல்லும் நியமனக் குழு மூலம் பணிப்பாளர்களின் வெளிப்படுத்தல்களைச் சமர்ப்பிப்பதற்கா |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | ன நடவடிக்கைகளை தொடங்க வேண்டும். |
| (ஆ) | 2016 ஏப்ரல் 29 ஆம் திகதிய பிஈடி 03/2016 ஆம் இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் (2) ஆம் பந்தி | IRD இன் தொடர்புடைய பிரமாணங்களின் பிரகாரம் அரசாங்கத்திற்கு சொந்தமான நிறுவனங்களின் ஊழியர்கள் உட்பட அரசாங்க உத்தியோகத்தர்களின் உழைக்கும் போதே செலுத்தும் வரியானது, வரிக்குப் பொறுப்பான ஊழியரின் உழைப்புக்களில் இருந்து கழிக்கப்பட வேண்டிய போதிலும் வங்கிக்கும் மக்கள் வங்கியின் ஊழியர் சங்கத்திற்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட கூட்டு உடன்படிக்கை ஊழியர்களின் வருமான வரிப் பொறுப்பை ஊழியர்களின் சம்பளத்தில் இருந்து கழிக்காமல் வங்கியால் செலுத்துமாறு பணிப்புரை செய்கின்றது. அதன் அடிப்படையில், 2020 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக ஊழியர்களின் உழைப்புக்களில் இருந்து கழிக்காமல் ஊழியர்களின் சார்பாக ரூபா 26 மில்லியனை வங்கி செலுத்தியுள்ளது. | இரண்டு தசாப்தங்களுக்கும் மேலாக அரச வங்கிகள் மற்றும் அந்தந்த தொழிற்சங்கங்களுக்கு இடையே செய்துகொள்ளப்பட்ட கூட்டு உடன்படிக்கைகளில் வங்கியால் தாங்கிக்கொள்ளப்படும் உழைக்கும் போதே செலுத்தும் வரியானது நிரந்தர அங்கமாக இருந்து வருகிறது. | உரிய பிரமாணங்கள் பின்பற்றப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 21,226.7 மில்லியன் வரிக்கு முன்னரான இலாபமாக காணப்பட்டதுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் இலாபம் ரூபா 19,666.2 மில்லியனாக காணப்பட்டதனால் நிதிசார் விளைவுகளில் ரூபா 1,560.5 மில்லியன் தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. தேசத்தை கட்டியெழுப்பும் வரி மற்றும் நிதிச் சேவைகள் மீதான தேசத்தை கட்டியெழுப்பும் வரி என்பன நீக்கப்பட்டமை காரணமாக வரி செலவினம் குறைவடைந்தமை மற்றும் பெறுமதி சேர் வரி விகிதம் குறைவடைந்தமை என்பன இம் முன்னேற்றத்திற்கான பிரதான காரணமகும்.

## 2.2 பிரதான வருமான மற்றும் செலவின விடயங்களின் போக்கு தொடர்பான பகுப்பாய்வு

முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் முக்கிய வருமான செலவின விடயங்களின் பகுப்பாய்வு அதிகரிப்பு அல்லது குறைவு சதவீதத்துடன் கீழே தரப்பட்டுள்ளன.

| விபரம் | வேறுபாட்டு தொகை அதிகரிப்பு/ (குறைவு) (ரூபா'000) | வேறுபாடு % | வேறுபாட்டிற்கான காரணம் |
|---|---|---|---|
| வட்டி வருமானம் | (6,996,692) | 3.7 | தொழில்துறையின் வட்டி விகிதக் குறைப்பு காரணமாக வட்டி வருமானம் 2020 ஆம் ஆண்டில் இலங்கை ரூபா 179 பில்லியன் வரை 3.7% ஆல் குறைவடைந்துள்ளது. |
| வட்டி செலவினம் | (6,723,955) | 5.4 | வைப்புக்கள் மீதான வட்டி விகிதக் குறைப்பு காரணமாக வட்டிச் செலவினங்கள் 2020 ஆம் ஆண்டில் இலங்கை ரூபா 118 பில்லியன் வரை 5.4% ஆல் குறைவடைந்துள்ளது. |
| ஏனைய செலவினங்கள் | (1,888,714) | 11 | கொவிட் 19 காலப்பகுதியின் போது கிரயக் கட்டுப்படுத்தல் காரணமாக ஏனைய செலவினங்கள் 2020 ஆம் ஆண்டில் இலங்கை ரூபா 15 பில்லியன் வரை 11% ஆல் குறைவடைந்துள்ளன. வீழ்ச்சியில் ஏறத்தாழ 1/4 பங்கு சந்தைப்படுத்தல் மற்றும் ஊக்குவிப்பு கிரயத்திற்கு பொறுப்பானதாகும். |
| நட்டக்கழிவு கட்டணங்கள் | 3,079,148 | 36.3 | 1. ஒரு முக்கிய வாடிக்கையாளரின் PD ஆனது, கணிப்பீடு செய்யப்பட்ட PD இலிருந்து இறையாண்மை மதிப்பீட்டின் (sovereign rating) அடிப்படையிலான PD ஒன்றிற்கு மாற்றப்பட்டது.<br>2. விவேகத்தின் அளவீடொன்றாக ஏனைய சில வாடிக்கையாளர்கள் கட்டம் I இலிருந்து கட்டம் II இற்கு மாற்றப்பட்டனர்.<br>3. பொருளாதார காரணி சீராக்கத்தில் ஏற்பட்ட அதிகரிப்பு. |
| பெறுமதி சேர் வரி (வற்), தேசத்தை கட்டியெழுப்பும் வரி (என்பீரீ) மற்றும் நிதிச் | (5,058,309) | 56.8 | என்பீரீ & டிஆர்எல் என்பன நீக்கப்பட்டதன் காரணமாக 2019 ஆம் ஆண்டில் இலங்கை ரூபா 8.9 பில்லியனில் இருந்து 2020 ஆம் ஆண்டில் இலங்கை ரூபா 3.8 பில்லியன் வரை |

| | | | |
|---|---|---|---|
| சேவைகள் மீதான கடன் மீள்கொடுப்பனவு விதிப்பனவு (டிஆர்எல்) | | | 56.8% ஆல் குறைவடைந்துள்ளது. |
| ஆளணி செலவினங்கள் | 228,293 | 1.2 | பிரதானமாக ஓய்வூதிய கிரயங்கள் அதிகரித்ததன் காரணமாக ஆளணி செலவினங்கள் 2019 ஆம் ஆண்டில் இலங்கை ரூபா 19.5 பில்லியனில் இருந்து 2020 ஆம் ஆணடில் இலங்கை ரூபா 19.7 பில்லியன் வரை 1.2% ஆல் அதிகரித்துள்ளது. |

**2.3 விகிதப் பகுப்பாய்வு**

சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் பிரகாரம் மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான வங்கியின் குறித்த சில முக்கிய விகிதங்கள் இலங்கை மத்திய வங்கியால் வெளியிடப்பட்ட துறைவிகிதங்களுடனான ஒப்பீட்டுடன் கீழே தரப்படுகின்றன.

| **விபரம்** | **துறை விகிதம்** | **வங்கி** | |
|---|---|---|---|
| | | **2020** | **2019** |
| **செயலாற்றல் விகிதங்கள்** | | | |
| உரிமை மூலதனம் மீதான திரும்பல் (ஆர்ஓஈ) | 10.9 | 14.4 | 13.9 |
| சொத்துக்கள் மீதான திரும்பல் (ஆர்ஓஏ) | 1.0 | 1.0 | 1.1 |
| வட்டி எல்லை | 3.1 | 3.0 | 3.2 |
| **சொத்து தர விகிதம்** | | | |
| மொத்த செயற்பாடற்ற முற்பணங்கள் (என்பிஎல்) | 4.7 | 3.2 | 3.3 |
| **மூலதன போதுமை விகிதங்கள்** | | | |
| தட்டு 1 மூலதனம் (ஆகக் குறைந்தது 10%) | 13.1 | 9.5 | 10.7 |
| மொத்த மூலதனம் (ஆகக் குறைந்தது 14%) | 16.7 | 15.5 | 14.7 |
| **நியதிச்சட்ட விகிதம்** | | | |
| திரவச் சொத்து விகிதம் (ஆகக் குறைந்த தேவைப்பாடு 20%) | 33.8 | 25.61 | 21.7 |
| திரவத்தன்மை மேவுகை விகிதம் (ஆகக் குறைந்த தேவைப்பாடு 100%) | | ரூபா - 166.82 அனைத்து நாணயம் – 111.55 | ரூபா - 160.80 அனைத்து நாணயம் - 132.10 |

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்**

| **கணக்காய்வு விடயம்** | **முகாமைத்துவக் கருத்துரை** | **பரிந்துரை** |
|---|---|---|
| மீளாய்வாண்டின் போது இரண்டு செயற்திட்டங்களிற்காக வங்கி ரூபா 486,202 | குறித்துக் கொள்ளப்பட்டது. இந்த விடயம் 2022 | கொடுக்கல் வாங்கல்கள் |

மற்றும் ரூபா 795,121 தொகையான முற்பணத்தை சில்வர் லேக் ஸ்ரக்சேர்ட் சேவிஸஸ் (Silver Lake Structured Services) SDN.BHD இற்கு செலுத்தியிருந்த போதிலும் அச் செயற்திட்டங்கள் கைவிடப்பட்டன.

செப்தெம்பர் 30 இற்கு முன்னர் தீர்க்கப்படுவதற்கான இலக்கொன்றுடன் பார்க்கப்படுகிறது.

சிக்கனமாக இருக்க வேண்டும்.

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

**-----------------------------------------------**

**கணக்காய்வு விடயம்**

**-----------------------------------**

| **நட்டம்** | | **2020** | | | **2019** | |
|---|---|---|---|---|---|---|
| **நிகழ்வு** | **நிகழ்வுகளின் எண்ணிக்க** | **பெறுமதி ரூபா மில்லியன்** | **மொத்த பெறுமதியின் சதவீதம்** | **எண்ணிக்கை** | **பெறுமதி ரூபா மில்லியன்** | **மொத்த பெறுமதியின் சதவீதம்** |
| உள்ளக மோசடிகள் | 1 | 0.43 | 0.06 | 1 | 4.9 | 5.80 |
| வெளியக மோசடிகள் | 181 | 735.5 | 95.5 | 311 | 52.63 | 62.31 |
| வாடிக்கையாளர், உற்பத்திப் பொருள் மற்றும் வணிக நடைமுறைகள் | 1 | 23.01 | 2.99 | 2 | 0.67 | 0.79 |
| பௌதீக சொத்துக்களுக்கான சேதம் | 4 | 0.51 | 0.07 | 20 | 2.05 | 2.43 |
| வணிக இடையூறுகள் மற்றும் முறைமை தோல்விகள் | 7 | 0.23 | 0.03 | 12 | 1.15 | 1.36 |
| செயற்படுத்தல், விநியோகம் மற்றும் செயன்முறை முகாமைத்துவம் | 96 | 10.5 | 1.36 | 121 | 23.06 | 27.3 |
| **மொத்தம்** | **290** | **770.18** | **100** | **467** | **84.46** | **100** |

வங்கியின் நட்ட நிகழ்வுகளின் எண்ணிக்கை குறைக்கப்பட்ட போதிலும் ”வெளியக மோசடிகள்” மற்றும் ”வாடிக்கையாளர், உற்பத்திப்பொருள் மற்றும் வணிக நடைமுறைகள்” ஆகியவற்றின் கீழ் வகைப்படுத்தப்பட்ட முறையே ரூபா 718.395 மில்லியன் மற்றும் ரூபா 23.007 மில்லியன் தொகையான இரண்டு பெரிய

**முகாமைத்துவக் கருத்துரை**

**--------------------------**

விரைவான திருத்த நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

தற்போது, விசா/ மாஸ்டர் அட்டை திரும்பப்பெறும் செயன்முறை, வாடிக்கையாளர் கணக்குகள், காப்புறுதி மற்றும் விசா/ மாஸ்டர் அட்டை ஆதரவு ஒப்பந்தம் என்பவற்றின் பிரகாரம் ஏறத்தாழ இலங்கை ரூபா 5.0 மில்லியன் தேறிய நட்டத்துடன் இலங்கை ரூபா 713 மில்லியன் அறவிடப்பட்டுள்ளது.

**பரிந்துரை**

**---------------**

மோசடி கண்காணிப்பு முறைமை வலுப்படுத்தப்பட வேணடியதுடன் தடுப்பு நடவடிக்கைகளாக உள்ளக கட்டுப்பாட்டு முறைமைகள் கண்டிப்பாக பின்பற்றப்பட வேண்டும்.

மோசடிகள் காரணமாக முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது நட்ட நிகழ்வுகளின் பெறுமதி 812 சதவீதத்தால் அதிகரித்துள்ளது.

- ஜப்பானில் தானியங்கி எரிபொருள் விநியோகம் (AFDகள்) மூலம் குறிப்பிட்ட வணிக வகை குறியீடுகளில் (MCCs) இருந்து உருவான கணிசமான எண்ணிக்கையிலான வெளிநாட்டு வரவு அட்டை கொடுக்கல் வாங்கல்களுடன் (VISA & Master) ஈடுபட்ட மேற்குறிப்பிட்ட வெளியக மோசடி சம்பந்தப்பட்ட வாடிக்கையாளர்களின் கணக்குகளிற்கு வரவு வைக்கப்பட்டிருக்காததுடன் கணக்குகளில் உள்ள மீதிகளை விஞ்சி கொடுக்கல் வாங்கல்களை செய்யக்கூடியதாக உள்ளது. அட்டை முறைமையில் உள்ள சில குறைபாடுகள் மற்றும் சில உள்ளக கட்டுப்பாடுகள் பின்பற்றப்படாதமை ஆகியன காரணமாக வங்கியால் இந்த மோசடியான கொடுக்கல் வாங்கல்களை தடுக்கவும் கண்டறியவும் முடியவில்லை.

- ”வாடிக்கையாளர், உற்பத்திப்பொருள் மற்றும் வணிக நடைமுறைகள்” என்ற வகையின் கீழ் வகைப்படுத்தப்பட்ட மேற்குறிப்பிட்ட நட்ட நிகழ்வானது அரிசி ஆலை ஒன்றின் குறிப்பிட்ட நடைமுறைக் கணக்கிற்கு ஐந்து நிகழ்வுகளில் பௌதீக ரீதியாக சமர்ப்பிக்கப்படாத ரூபா 23.007 மில்லியன் கூட்டுமொத்தமான காசோலைகளை சேகரிப்பதுடன் தொடர்புபட்டதாகும். மாற்றுண்டியல் (Bills of Exchange) சட்டத்தின் பிரகாரம் ஒரு காசோலையின் படத்திற்கு எதிராக சேகரிப்பதற்கு/பணம் செலுத்துவதற்கு ஏற்றுக்கொள்வது அல்லது காசோலைக்கு பதிலாக அதே போன்ற ஏதாவது சட்டத்தை மீறுவதாகக் கொள்ளலாம். வங்கியின் மீதான நம்பிக்கை மீறல் காரணமாக வங்கியின் மேலும் நற்பெயர் சேதமடைந்தது. அதன் பிரகாரம் லங்கா சதொச லிமிட்டட் இச் சம்பவம் குறித்து முறைப்பாடு செய்திருந்ததுடன், வங்கி நடைமுறைகள் தொடர்பில் தமது கடுமையான சந்தேகத்தை வெளிப்படுத்தியிருந்தமை இதனை சான்றுபடுத்துகின்றது. எனவே இது தவறான செயற்பாடுகளில் செய்யப்படும் சட்டபூர்வமான செயற்பாட்டின் அலட்சியம் மற்றும் புறக்கணிப்பு ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது.

கருத்துரை வழங்கப்படவில்லை.

**3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்**

| | கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2020 ஆம் ஆண்டின் போது வங்கி ரூபா 654,747 மில்லியன் கடன்களை வழங்கியிருந்ததுடன் அதில் ரூபா 5,475 மில்லியன் 2021 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு செயற்பாடற்ற வகைக்கு மாற்றப்பட்டுள்ளது. அதில் ரூபா 202.9 மில்லியன் ஒரு தவணை கூட அறவிடப்பட்டிருக்கவில்லை. 2021 செப்தெம்பர் 30 இல் உள்ளவாறு ரூபா 174.1 மில்லியன் எந்த மூலதனத் தவணையும் அறவிடப்பட்டிருக்காததுடன் ரூபா 28.7 மில்லியன் எந்த வட்டி தவணையும் அறவிடப்பட்டிருக்கவில்லை. | 2021 திசெம்பர் 31 இல் - பின்வருவனவற்றின் விளைவாக OBU SOE வெளிப்படுத்தல் 64% வரை குறைவடைந்திருந்தது;<br>(அ) 2021 ஆம் ஆண்டின் போது ஐ.அ.டொலர் 471 மில்லியன் (ரூபா 94,553 மில்லியன்) FCY DST | செயற்பாடற்ற கடன்கள் தொடர்பாக தொடர்ச்சியாக பின்தொடர் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும். |

| | | |
|---|---|---|
| (ஆ) | அரச உடமையாக்கப்பட்ட நிறுவனங்களுக்கு (SOEs) சொந்தமான மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களின் நிலுவை மீதி ரூபா 845 பில்லியனாக காணப்பட்டதுடன் இது வங்கியின் மொத்த கடன் மற்றும் முற்பணத்தில் 49.02 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டின் போது இது ரூபா 244 பில்லியன் அல்லது 40.50 சதவீத அதிகரிப்பை குறிக்கின்றது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியின் மொத்த சொத்து அடிப்படை ரூபா 357 பில்லியன் அல்லது 19.04 சதவீதத்தால் அதிகரித்து ரூபா 2,230 பில்லியனாக காணப்பட்ட போதிலும் 37.88 சதவீதம் SOE இற்கான கடன் மற்றும் முற்பணத்தின் மூலம் பிரதிநிதித்துவம் செய்யப்படுகிறது. | கடன்களின் தீர்ப்பனவு. இது 2020 திசெம்பர் 31 இல் FCY DST கடன் வழங்கலை ஐ.அ.டொலர் 650 மில்லியனிற்கு மேல் இருந்து ஐ.அ.டொலர் 200 மில்லியன் வரை குறைத்திருந்தது. (ஆ) 2021 ஒக்தோபர் 7 இன் ALCO தீர்மானத்தின் பிரகாரம் - ஐ.அ.டொலர் 716 மில்லியன் CPC மூலதன நிலுவை OBU இலிருந்து DBU இற்கு மாற்றப்பட்டது. எந்தவொரு சந்தேகத்தையும் தவிர்ப்பதற்கு, இது சிறந்த திரவத்தன்மை முகாமைத்துவ நோக்கங்களுக்காக காணப்பட்டதுடன் பணிப்பாளர் சபையின் அங்கீகாரம் மற்றும் CBSL அனுமதிக்குப் பின்னர் மேற்கொள்ளப்பட்டது. (இ) 2021.12.31 இல் உள்ளவாறான மொத்த NP O/S ஐ.அ.டொலர் 39.68 மில்லியன் (அல்லது ரூபா 7,967 மில்லியன்) ஆக காணப்பட்டது. NP நிலைமையை (களை) மீட்டெடுப்பதற்கு/ குறைப்பதற்கு அறவீட்டு பிரிவுடன் இணைந்து சரியான நேரத்தில் மற்றும் இயன்றளவு விரைவாக நியாயமான முறையில் முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. |
| (இ) | 2020 திசெம்பர் 31 இல் கரைகடந்த வங்கி பிரிவின் மொத்த கடன்கள் மற்றும் முற்பணங்களின் நிலுவை மீதி ரூபா 374,821 மில்லியனாக காணப்பட்டதுடன் அதில் ரூபா 329,445 மில்லியன் அல்லது 87.89 சதவீதம் SOEs இற்கு சொந்தமானதாகும். முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் இது ரூபா 76,501 மில்லியன் அல்லது 30.24 சதவீத அதிகரிப்பை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. மொத்தம் ரூபா 9,086 மில்லியன் அல்லது 2.42 சதவீதம் செயற்பாடற்ற கடன் (NPL) மீதியாக காட்டப்பட்டுள்ளது. முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது மீளாய்வாண்டில் மொத்தச் செயற்பாடற்ற மீதி ரூபா 524 மில்லியன் அல்லது 6.12 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு கரைகடந்த வங்கி பிரிவின் முதல் 10 செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்கள் ரூபா 4,652 மில்லியன் மூலதனம் மற்றும் ரூபா 4,382 மில்லியன் வட்டியுடன் ரூபா 9,034 மில்லியனாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இது மேற்குறிப்பிட்ட மொத்த NPL இல் 99 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகிறது. | |
| (ஈ) | 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு வங்கியின் 5 மில்லியனுக்கும் மேலான மொத்தச் செயற்பாடற்ற கடன்கள் ரூபா 33,000 மில்லியன் மூலதனம் மற்றும் ரூபா 34,381 மில்லியன் வட்டி உட்பட ரூபா 67,381 மில்லியனாக காணப்பட்டதுடன் இது மொத்தச் செயற்பாடற்ற கடன்கள் | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள இலங்கை ரூபா 5.0 மில்லியனுக்கும் அதிகமான கடன்களின் மொத்த மீதியில், |

| | |
|---|---|
| மற்றும் மேலதிகப்பற்றின் 77 சதவீதத்தை ஆக்கிரமித்துள்ளது. | இலங்கை ரூபா 13,686 மில்லியன் மூலதன மீதியை அறவீடு செய்வதற்கு வழக்கு நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இலங்கை ரூபா 2,660 மில்லியன் தொகையான மூலதன மீதியை அறவீடு செய்வதற்கு Parate proceedings ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் இலங்கை ரூபா 14,636 மில்லியன் மூலதன மீதிகளை அறவீடு செய்வதற்கு பேச்சுவார்த்தை நடாத்தப்படுகிறது. இலங்கை ரூபா 2,202 மில்லியன் மூலதன மீதி ஏற்கனவே தீர்ப்பனவு செய்யப்பட்டிருந்தது அல்லது 2022.01.31 இல் re-seducement இன் பின்னரான திருப்திகரமான செயலாற்றல் காரணமாக செயற்படுபவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளது. |
| (உ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 4,053 மில்லியன் மூலதனம் மற்றும் ரூபா 3,614 மில்லியன் வட்டி உள்ளடங்கலாக வங்கியின் 5 மில்லியனுக்கும் அதிகமான மொத்த செயற்பாடற்ற மேலதிகப் பற்றுக்கள் ரூபா 7,667 மில்லியனாக காணப்பட்டது. | இங்கு குறிப்பிடப்பட்டுள்ள மேலதிகப்பற்றுக்களில் இலங்கை ரூபா 5.0 மில்லியனிற்கு மேலான மொத்த மீதிகளில், இலங்கை ரூபா 1,160.0 மில்லியன் மூலதன மீதிகளுடன் மேலதிகப்பற்றுக்களை அறவீடு செய்வதற்கான வழக்கு நடவடிக்கைகள் தொடங்கப்பட்டுள்ளன, தற்போது இலங்கை ரூபா 2,483.0 மில்லியன் மூலதன மீதிகளை தீர்ப்பனவு செய்வதற்கான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருகின்றதுடன் இலங்கை ரூபா 175.0 மில்லியன் |

தொகையை அறவீடு செய்வதற்காக Parate நிறைவேற்றல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. இலங்கை ரூபா 235 மில்லியன் பெறுமதியான மேலதிகப்பற்றுக்கள் ஏற்கனவே 2022.01.31 இல் உள்ளவாறு செயற்படுபவையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன அல்லது தீர்ப்பனவு செய்யப்பட்டுள்ளன.

(ஊ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு முதல் 10 செயற்பாடற்ற கடன்களின் மொத்த நிலுவை ரூபா 21,902 மில்லியன் மூலதனம் மற்றும் ரூபா 25,463 மில்லியன் வட்டி உள்ளடங்கலாக ரூபா 47,366 மில்லியன் ஆகும், இது மொத்தச் செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களில் 40.75% ஐ பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அதில் ரூபா 26,652 மில்லியன் அல்லது மேற்படி முற்பணங்களில் 56.3 சதவீதம் பிணைகள் எதனையும் கொண்டிருக்கவில்லை, மேலும் ரூபா 2,235 மில்லியன் அல்லது மேற்படி முற்பணங்களில் 4.7 சதவீதம் போதுமான பிணைகளைக் கொண்டிருக்கவில்லை.

| இல. | வாடிக்கையாளரின் பெயர் | மூலதன மீதி | வட்டி மீதி | மொத்த மீதி |
|---|---|---|---|---|
| 01 | சீஎம்எல் குழுமம் | 3,596 | 1,084 | 4,680 |
| 02 | கிராண்ட் மவுண்ரெய்ன் குழுமம் | 3,136.9 | 427 | 3,563.9 |
| 03 | டபிள்யூ எம் மெண்டிஸ் அன்ட் கம்பனி லிமிட்டட் | 3,063 | 812.7 | 3,875.7 |
| 04 | யசோதா குழுமம் | 3,030.4 | 20,950.2 | 23,980.6 |
| 05 | மிஹின் லங்கா (பிறைவேட்) லிமிட்டட் | 2,500.5 | 1.5 | 2,502 |
| 06 | குரவி இன்டர்நேஷனல் பிறைவேட் லிமிட்டட் | 1,785 | 393.8 | 2,179 |
| 07 | தயா அப்பெரல் குழுமம் | 1,159.8 | 783.4 | 1,943.2 |
| 08 | நவலோகா குழுமம் | 1,577.4 | 121.8 | 1,699.3 |
| 09 | குட் பெலோவ்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 1032.5 | 872.7 | 1905.3 |

முதல் பெரிய 10 NP கடன் பெறுபவர்களின் அறவீட்டு நடவடிக்கைகளின் தற்போதைய நிலைமை தொடர்பான விபரங்களுக்கு தயவுசெய்து பின்னிணைப்பு 3.3 (VI) ஐப் பார்க்கவும்.

| | | | | |
|---|---|---|---|---|
| 10 | சிற்றி கென்ஸ்ட்ரக்ஷன் கென்ட்ராக்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 1,020.9 | 15.5 | 1,036.5 |

(எ) 2020 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 2020 ஆம் ஆண்டின் போது மீள்கட்டமைக்கப்பட்ட/ மீள்பட்டியலிடப்பட்ட மற்றும் செயற்பாடற்றவைக்கு மாற்றப்பட்ட முதல் 10 செயற்பாடற்ற கடன்களின் மொத்த நிலுவையானது ரூபா 1,067.6 மில்லியன் மூலதனம் மற்றும் ரூபா 16.4 மில்லியன் வட்டி உள்ளடங்கலாக ரூபா 1,084 மில்லியன் ஆக காணப்பட்டது. இது மொத்த செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களில் 1.99 சதவீதத்தை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அதில் ரூபா 350 மில்லியன் அல்லது மேற்படி முற்பணங்களில் 32.30 சதவீதம் எந்தவொரு பிணையையும் கொண்டிருக்கவில்லை.

| இல. | வாடிக்கையாளரின் பெயர் | மூலதன மீதி | வட்டி மீதி | மொத்த மீதி |
|---|---|---|---|---|
| 01 | சிற்றி கென்ஸ்ட்ரக்ஷன் கென்ட்ராக்டர்ஸ் (பிறைவேட்) லிமிட்டட் | 786.7 | 15.1 | 801.8 |
| 02 | செலிங்கோ சசெக்ஸ் எடியூகேசனல் சேவிஸஸ் லிமிட்டட் | 61.9 | 0.2 | 62.2 |
| 03 | மைக்ரோ எண்டர்பிறைசஸ் | 43.9 | - | 43.9 |
| 04 | ஆரியபால | 31.9 | - | 31.9 |
| 05 | குமாரகே | 27.7 | - | 27.7 |
| 06 | ஈஸ்ட் வெஸ்ட் மார்க்கெட்டிங் (பிறைவேட்) லிமிட்டட் | 26.2 | 0.1 | 26.3 |
| 07 | டி எம் ஜீவன் பிறைவேட் லிமிட்டட் | 25.8 | 0.1 | 25.9 |
| 08 | நியூ பால் பக்கேஜிங் (பிறைவேட்) லிமிட்டட் | 24.9 | 0.8 | 25.7 |
| 09 | துமிந்த பில்டர்ஸ் பிறைவேட் லிமிட்டட் | 21 | 0.01 | 21.03 |
| 10 | சல்பிகர் | 17.5 | - | 17.5 |

ஈஸ்ட் வெஸ்ட் மார்கெட்டிங் (பிறைவேட்) லிமிட்டட்: பணிப்பாளர்களின் தனிப்பட்ட உத்தரவாதங்கள் நீடிக்கப்பட்டுள்ளதுடன் நாங்கள் தனிப்பிட்ட உத்தரவாதங்களை பிணையாக கருதினோம். மேலும் திரு. ஜெயந்த தர்மதாச மற்றும் யு.எச். தர்மதாச ஆகியோர் உயர் தேறிய மதிப்புள்ள தனிநபர்களாக உள்ளதுடன் வழக்கு தொடங்கும் போது பிணையை உணர முடியும். எனவே இந்த வசதியும் பாதுகாப்பானதாகக் கருதப்படலாம்.

<u>நியூ பால் பக்கேஜிங் (பிறைவேட்) லிமிட்டட்:</u> சொத்து மீதான ஈட்டின் மூலம் அனைத்து வசதிகளும் பாதுகாக்கப்படுகின்றதுடன் அனைத்து வசதிகளுக்கும் ஈட்டுப் பத்திரங்கள் ஏற்கனவே பெறப்பட்டுள்ளன.

(ஏ) 2016 முதல் 2020 வரை செயற்பாடற்ற கடன்கள் மற்றும் முற்பணங்களின் ரூபா 645.51 மில்லியன் திரண்ட தொகை பதிவழிக்கப்பட்டிருந்தது/ விட்டுவிடப்பட்டிருந்ததுடன் 2020 ஆம் ஆண்டின் போது ரூபா 195.7 மில்லியன்

பதிவழிப்பு செய்யப்பட்ட போதிலும் PB முகாமைத்துவம்/ அறவீட்டு பிரிவானது

| | | |
|---|---|---|
| பதிவழிக்கப்பட்டிருந்தது/ விட்டுவிடப்பட்டிருந்தது. | | பதிவழிக்கப்பட்ட குறித்த தொகையில் (களில்) ஒரு பகுதியை அறவீடு செய்வதில் வெற்றியைப் பெற்றுள்ளது. |

### 3.4 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு விடயம் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| வெளியிடப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பகுப்பாய்வின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டிற்கான வங்கியின் தேறிய செயற்பாட்டு வருமானத்தின் சதவீதமொன்றாக ஆளணிச் செலவினங்கள் 32.79 சதவீதமாக காணப்பட்டதுடன் இது 27.24 சதவீதத்திலிருந்து 29.72 சதவீதம் வரையான வீச்சில் அறிக்கையிட்ட இலங்கை வங்கி, கொமர்ஷல் வங்கி, சம்பத் வங்கி மற்றும் ஹட்டன் நஷனல் வங்கி ஆகிய ஏனைய வர்த்தக வங்கிகளுடன் ஒப்பிடும் போது மிக உயர்ந்த பெறுமதியைக் குறிக்கிறது. இதன் விளைவாக ஊழியர் ஒருவரின் இலாபத்திற்கான பங்களிப்பு குறைவடைந்துள்ளது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | ஊழியர்களின் வினைத்திறனை அதிகரிக்கும் அதே நேரம் வங்கி நிதிகளை செயற்திறனாக பயன்படுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் அவசியம். |